செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 21.04.2023

**செய்தி வெளியீடு**

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2021=100): மார்ச்சு 2023**


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

**தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk**


2013=100 என்ற சுட்டெண் குறுப்பீட்டுக் காலத்தைக் கொண்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) 2023 ஜனவரி முதல் 2021= 100 என்ற புதிய சுட்டெண் குறிப்பீட்டுக் காலத்துக்கு இற்றைப்படுத்தப்பட்டது. 2023 மார்ச் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 49.2% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2023 பெப்ரவரி மாதத்தின் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 53.6% ஆக இருந்தது. 2023 பெப்ரவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 18.9% மற்றும் 30.3% ஆக காணப்படுகின்றன. 2022 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 மார்ச் மாதத்தின் பொருட்டு பதிவாகிய பணவீக்கத்துக்கான பிரதான காரணம், உணவு மற்றும் உணவல்லாப் பிரிவு இரண்டிலும் நிலவிய உயர்வான விலை மட்டங்களாகும். இருப்பினும், மாதாந்த அடிப்படையில் உணவுப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2023 பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய 49.0% இல் இருந்து 2023 மார்ச் மாதத்தில் 42.3% வரை குறைவடைந்தது என்பதுடன் உணவல்லாப் பிரிவின் வருடத்தின் மீது வருட பணவீக்கமும் 2023 பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய 57.4% இல் இருந்து 2023 மார்ச் மாதத்தில் 54.9% வரை குறைந்துள்ளது.

மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில், 2023 பெப்ரவரி மாதத்தில் பதிவாகிய 204.1 இலிருந்து 2023 மார்ச் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021= 100) 204.8க்கு அதிகரித்துள்ளது. இது 2023 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.7 சுட்டெண் புள்ளிகள் அல்லது 0.36 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது. உணவு மற்றும் உணவல்லாப் பொருட்களில் முறையே 0.94% மற்றும் 1.30% ஆல் ஏற்பட்ட அதிகரிப்புகள் இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களித்தது.

உணவுப்பொருட்களின் விலை குறைப்புகள் பிரதானமாக மரக்கறி, அரிசி, புதிய மீன், பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், உருளைக்கிழங்கு, மைசூர் பருப்பு, பாண் (சாதாரண), மிளகாய் தூள், சீனி, கோழி இறைச்சி, கருவாடு, கோதுமை மா, மஞ்சள் தூள், காய்ந்த மிளகாய், பன்கள், கௌபீ, வெள்ளைப்பூடு மற்றும் நூடில்ஸ் ஆகியவற்றில் பதிவானது. எவ்வாறாயினும், விலைச்சுட்டி பெறுமதி அதிகரிப்புகள் பிரதானமாக தேங்காய், தேயிலை தூள்/இலைகள், புதிய பழங்கள், பாசிப்பயறு, இஞ்சி, தேங்காய் எண்ணெய், முட்டை, பச்சை மிளகாய், சோயா மீட் மற்றும் அரிசி மா என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மார்ச் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம் ‘ஆடையும் காலணியும்’, ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ (மின்சாரக் கட்டணம் மற்றும் எல்.பி எரிவாயு) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எவ்வாறாயினும், ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ (சலவை சவர்க்காரம்)’, ‘போக்குவரத்து’(பெற்றோல், டீசல் மற்றும் பஸ் கட்டணங்கள்)’, ‘உணவகங்களும் ஹோட்டல்களும்’, அத்துடன் ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ (சிங்காரிப்புச் சவர்க்காரம்) ஆகிய பிரிவுகளில் விலை குறைப்புகள் பதிவாகின. மேலும், சுகாதாரம் ‘தொடர்பாடல்’’ ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ பிரிவுகளில் மிகவும் குறைந்த விலை குறைப்புகள் பதிவாகின. எனினும் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் மதிமயக்க மருந்துகள்’ பிரிவுகளில் மிகவும் குறைந்த விலை குறைப்புகள் பதிவாகின. அதேநேரம், ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ பிரிவுகளின் விலைக் குறியீடுகள் இந்த மாதத்தில் மாறாதிருந்தன.

2023 மார்ச் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) (அடிப்படை 2021= 100) அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2023 பெப்ரவரி மாதத்தில் பதிவான 50.1% இல் இருந்து 44.2% இற்கு குறைவடைந்திருந்தது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2021 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | | | தே.நு.வி.சு (மையம்) |
| | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் | | | அனைத்து பொருட்கள் | உணவு | உணவு அல்லாத | அனைத்து பொருட்கள் |
| 2022 | மார்ச்சு | 137.3 | 156.9 | 124.6 | 130.4 | 3.3 | 3.3 | | | | |
| | ஏப்ரல் | 151.7 | 176.1 | 136.0 | 142.8 | 10.5 | 9.5 | | | | |
| | மே | 166.3 | 195.3 | 147.6 | 154.5 | 9.6 | 8.2 | | | | |
| | யூன் | 183.5 | 222.8 | 158.2 | 167.5 | 10.3 | 8.4 | | | | |
| | யூலை | 193.1 | 233.4 | 167.1 | 176.8 | 5.2 | 5.6 | | | | |
| | ஆகஸ்ட் | 197.7 | 237.5 | 171.9 | 181.2 | 2.4 | 2.5 | | | | |
| | செப்ரெம்பர் | 201.9 | 239.1 | 178.0 | 185.9 | 2.1 | 2.6 | | | | |
| | ஒக்ரோபர் | 201.6 | 236.5 | 179.1 | 188.0 | -0.1 | 1.1 | | | | |
| | நவம்பர் | 200.3 | 233.2 | 179.1 | 187.8 | -0.6 | -0.1 | | | | |
| | டிசெம்பர் | 200.4 | 232.4 | 179.8 | 188.0 | 0.0 | 0.1 | | | | |
| 2023 | ஜனவரி | 201.8 | 232.8 | 181.8 | 189.8 | 0.7 | 1.0 | 53.2 | 53.6 | 52.9 | 52.0 |
| | பெப்ரவரி | 204.1 | 228.1 | 188.6 | 189.4 | 1.1 | -0.2 | 53.6 | 49.0 | 57.4 | 50.1 |
| | மார்ச்சு | 204.8 | 223.2 | 193.0 | 188.1 | 0.3 | -0.7 | 49.2 | 42.3 | 54.9 | 44.2 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்